# <u>கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.</u>

**முன்னிலை : செல்வி. D. ஜெயபாரதி, L.L.M**

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம், தேனி.

2026–ம் ஆண்டு ஜுலை மாதம் 13–ம் நாள் திங்கள்கிழமை

**<u>Crl.M.P.No. 1047/2026</u>**
**<u>in</u>**
**<u>DVOP No.29/ 2025</u>**

சிவநந்தினி (35/26)
க.பெ. ராஜ்குமார்
வார்டு எண்.32
காந்திஜி ரோடு, ... மனுதாரர் / மனுதாரர்
அரசினர் தொழில்பயிற்சி மையம்
எதிரில் 354H/158,
கருவேல்நாயக்கன்பட்டி,
தேனி

**/ எதிர் /**

1. ராஜ்குமார் (42/26)
த.பெ. பாலகிருஷ்ணன்
எண்.1A, MLM சுதர்சன் ....எதிர்மனுதார்/ எதிர்மனுதாரர்
அப்பார்ட்மெண்ட்ஸ்,
மேலக்கால் மெயின்ரோடு,
கோச்சடை
மதுரை.

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவு 23(2)–ன் கீழ் மனுதாரருக்கும், அவரது குழந்தை ரக்ஷன் மற்றும் சாய்பிரணவிக்கும் மாதம் ஒன்றுக்கு இடைக்கால பராமரிப்பிற்காக மாதம் தோறும் தலா ரூ.50,000/– வீதம் ரூ.1,50,000/–த்தை இடைக்கால ஜுவனாம்சமாக எதிர்மனுதாரர்

வழங்க வேண்டும் என்று இடைக்கால உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **<u>மனுவின் சுருக்கம்: –</u>**

1. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 07.03.2021–ம் தேதி திருமணம் நடைபெற்றது என்றும். திருமணத்தின் போது மனுதாரரின் பெற்றோர்கள் மனுதாரருக்கு 50 பவுன் தங்க நகையும், ரூ.5,00,000/– மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களும் வரதட்சணையாக கொடுத்து திருமணத்தை நடத்தி வைத்தனர் என்றும். திருமணம் முடிந்து மனுதாரரும், எதிர்மனுதாரரும், 3ம் எதிர்மனுதாரரான 1ம் எதிர்மனுதாரரின் சகோதரி மற்றும் அவரது கணவர் மற்றும் குழந்தைகளுடன் கூட்டுக் குடும்பமாக எதிர்மனுதாரர் வீட்டில் வாழ்ந்த போது அவர்களுக்கு தேவையான அனைத்து செலவுகளையும் 1ம் எதிர்மனுதாரரே செய்து வந்தார் என்றும், திருமணம் முடிந்து ஒரு மாத காலம் மட்டுமே மனுதாரரும், எதிர்மனுதாரரும் சந்தோசமாக குடும்பம் நடத்தி வந்ததாகவும் அதன் பின் 2,3 எதிர்மனுதாரர்கள் மனுதாரரை கொடுமைபடுத்தியதாகவும், மனுதாரர் நகைகளை அடகு வைத்தும் அவரது பெற்றோரிடம் பணம் வாங்கியும், மீதப் பணத்திற்கு வங்கியில் லோன் போட்டும் மனுதாரர் பெயரில் மதுரையில் சொந்தமாக வீடு வாங்கியதாகவும், அதன்பின்னர் 1ம் எதிர்மனுதாரரும், மனுதாரரும் அந்த வீட்டில் சிறிது காலம் வாழ்ந்து வந்தார்கள் என்றும் அப்போதும் 1ம் எதிர்மனுதாரர், மனுதாரருடன் சந்தோசமாக வாழாமலும் மனுதாரரை மணம் நோகும்படி பேசியதாகவும், 1ம் எதிர்மனுதாரர், மனுதாரரையும் குழந்தைகளையும் சரிவர பராமரிக்காததால் மனுதாரர் சாய் எண்டர்பிரைசஸ் என்ற பெயரில் ஒரு சிறிய தொழில் தொடங்கி அதில் வரும் சிறு வருவாயை கொண்டு குழந்தைகளின் தேவையை பூர்த்தி செய்து வங்கியில் பெற்ற வீட்டுக்கடனுக்கான தவணையை செலுத்திவந்ததாகவும்,

2. இதுவரை குழந்தைகளின் கல்விக்கட்டணத்தைக்கூடா சரியான நேரத்தில் குழந்தைகளின் தகப்பனார் என்ற முறையில் 1ம் எதிர்மனுதாரர் செலுத்தியது கிடையாது என்றும் குழந்தைகளை வீட்டில் வைத்து பூட்டிவைத்து மிரட்டுவதையும், அடித்து துன்புறுத்துவதையும் வாடிக்கையாக வைத்துவந்தனர் என்றும் 1ம் எதிர்மனுதாரர் குடிக்கு அடிமையாகி தினமும் குடித்துக்கொண்டு வந்து வீட்டில் பிரச்சனை செய்து 1ம்எதிர்மனுதாரர், மனுதாரரை பல்வேறு வகையில் இயற்கைக்கு முரணான உடலுறவுக்கு தொந்தரவுகளை செய்து வந்தார் என்றும், மனுதாரர் நடத்திவந்த சாய்

எண்டர்பிரைசஸ் நிறுவனத்தையும், மனுதாரர் பெயரில் உள்ள வீட்டினையும் 1ம் எதிர்மனுதாரர் வலுக்கட்டாயமாக அவரது கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக்கொண்டு, மனுதாரரின் கையொப்பத்தை அச்சு அசலாக எதிர்மனுதாரரே நிரப்பி பல்வேறு ஆவணங்களை உற்பத்தி செய்துகொண்டு, மனுதாரரின் வங்கிக்கணக்கு ஆவணங்கள் அனைத்தையும் 1ம் எதிர்மனுதாரர் வாங்கிவைத்துக்கொண்டு அவரே பயன்படுத்தி வந்தார் என்றும் , பின்னர் எதிர்மனுதாரர்களின் கொடுமை தாங்காமல் 18.11.2025ம் தேதி மனுதாரர் அவரது குழந்தைகளுடன் பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டதாகவும், தற்போது மனுதாரர் மனதளவிலும், உடலளவிலும் மிகவும் பாதிக்கப்பட்டு கடந்த 4 ஆண்டுகளாக மருத்துவ சிகிச்சை பெற்ற வருகிறார், 1ம் எதிர்மனுதாரர் தொழில் செய்து மாதந்தோறும் ரூ.5,00,000/-வரை வருமானம் ஈட்டி வருகிறார். எனவே , மனுதாரருக்கும், அவரது குழந்தைகளான ரக்ஷன் மற்றும் சாய்பிரணவிக்கும் மாதம் ஒன்றுக்கு இடைக்கால பராமரிப்பிற்காக தலா ரூ.50,000/- வீதம் ரூ.1,50,000/-த்தை இடைக்கால ஜுவனாம்சமாக எதிர்மனுதாரர் வழங்க வேண்டும் என்று இடைக்கால உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>எதிருரையின் சுருக்கம்</u>

1. எதிர்மனுதாரர் தரப்பில் மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை மறுப்பதாகவும் மனுதாரரும், எதிர்மனுதாரரும் காதல் செய்து திருமணம் செய்துகொண்டதால் எதிர்மனுதாரர் மனுதாரரை நல்லமுறையில் வாழ்ந்து வந்ததாகவும், மனுதாரர் தான் 1ம் எதிர்மனுதாரருடன் தனக்கு கூட்டுக்குடும்பமாக வாழ இஷ்டமில்லை என்பதால் தனிக்குடுத்தனம் செல்ல மனுதாரரை வற்புறுத்தி வந்ததாகவும், அதனால் எதிர்மனுதாரர் F228, சாந்தி சதர்ன் அபார்ட்மெண்டில் குடியேறியுள்ளார் என்றும் அதன்பிறகும் பிரச்சனை ஏற்பட்டதாகவும்

2. மேலும் மனுதாரரின் 2வது குழந்தை பிறந்தபோதும் மனுதாரர் தான் அனைத்து செலவுகளையும் செய்ததாகவும், தற்போது வரை குழந்தைகள் குயின் மீரா இண்டர்நேஷனல் பள்ளில் படித்து தற்சமயம் இந்தியன் பப்ளிக் ஸ்கூலில் படித்து வருகின்றனர், தற்போது வரை பள்ளிக்கட்டணத்தை 1ம் எதிர்மனுதாரர் தான் செலுத்திவருகிறார் என்றும் மனுதாரரின் சகோதரருக்கு ஒரு நிரந்தர வேலை வேண்டும் என்பதற்காக 1ம் எதிர்மனுதாரர் முயற்சி செய்து நெஸ்லே நிறுவனத்தில்

மனுதாரரின் சகோதரருக்கு வேலை வாங்கி கொடுத்துள்ளார். மேலும் மனுதாரரின் சித்தி மகன் பாண்டிராஜன் என்பவருக்கும் வயிற்று வலி ஏற்பட்டபோது மருத்துவ செலவுகளை செய்துள்ளார். மேலும் மனுதாரரின் சித்தி மகள் கோகிலா என்பவரை மெமோரியல் மெட்ரிகுலேஷன் பள்ளியில் 1ம் எதிர்மனுதாரர் தனது சொந்த செலவில் படிக்க வைத்துள்ளார். மேலும் தேனியில் மனுதாரர் பெயரில் 1ம் எதிர்மனுதாரர் தான் சொந்தமாக வீடு வாங்கிக்கொடுத்தாகவும், மனுதாரர் உடல்எடை குறைவான காரணத்தினால் ஹெர்பா லைஃப் என்ற சிகிச்சை மையத்திற்கு சென்று சிகிச்சை மேற்கொண்டுள்ளதாகவும், அங்கே டைட்டீசியான பணிபுரிந்து வரும் ரஞ்சித் என்பவர் ஜாஸ் ஜிம்முக்கு வந்து உடல்நலண் பேணுமாறு சொன்னதன்பேரில் மேற்படி ரஞ்சித் என்பவரும், மனுதாரருக்கும் திருமணத்தை மீறிய தவறான உறவு ஏற்பட்டுள்ளது. மனுதாரர் தேனி குடும்ப நல நீதிமன்றத்தில் **HMOP No.15/2026** என்ற மனுவினை தாக்கல் செய்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழக்கோரி மாண்புமிகு மதுரை குடும்பநல நீதிமன்றத்தில் **HMOP No.529/2026** என்ற மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

3. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கும் தனக்குமான திருமண உறவுமுறையை ஒப்புக்கொண்டும், இதர விபரங்களை மறுத்தும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரரின் மனு, எதிர்மனு உரை மற்றும் ஆவணங்கள் சீரிய முறையில் பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பு வழக்கறிஞர்கள் வாதம் கேட்கப்பட்டது.

5. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 07.03.2021 அன்று திருமணம் முடிந்து இருவரும் கணவன் மனைவியாக சேர்ந்து வாழ்ந்துள்ளார்கள் என்பதும், இருதரப்பாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் பிறந்த குழந்தைகள் பற்றியும் எந்த முரண்பாடும் இல்லை. மனுதாரர்களுக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் இடையே குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவு 2(f)– ன் படியான குடும்ப உறவுமுறை உள்ளது என்பது தெரியவருகிறது.

6. மனுதாரரின் மனு, ஆவணங்கள் எதிர்மனுதாரர்களின் எதிருரை ஆகியவற்றை பரிசீலிக்கும்போது மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்களால் குடும்ப வன்முறை நிகழ்ந்திருப்பதற்கான முகாந்திரம் இருப்பதாகவே இந்நீதிமன்றம்

கருதுகிறது. உண்மையில் குடும்பவன்முறை நிகழ்ந்ததா இல்லையா என்பது அசல் வழக்கின் முடிவில் தான் தெரியவரும். இடைக்கால ஜீவனாம்சமானது முதல் நோக்கு வழக்கை பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது.

7. கணவன் தன் மனைவி மற்றும் தனது குழந்தைக்கு உணவு, உடை, வசிப்பதற்கான ஏற்பாடு ஆகியவை கொடுத்து பராமரிக்க வேண்டியது என்பது குடும்ப வன்முறைச்சட்டம் பிரிவு 20 மற்றும் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 125-ன் படியும் கணவனின் கடமை என்பது தெளிவாகிறது .

8. மனுதாரர் தன்னுடைய மனுவில் எதிர்மனுதாரர் தொழில் செய்து மாதம் ரூ.5,00,000/- வரை வருமானம் ஈட்டி வருகிறார் என்று கூறியுள்ளார். ஆனால், மனுதாரர் தாக்கல் செய்துள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புறுதி விவர ஆவணத்தில் 1-ம் எதிர்மனுதாரர் என்ன வேலை பார்த்து வருகிறார் என்பது குறித்தும் என்ன சம்பளம் பெற்று வருகிறார் என்பது குறித்தும் குறிப்பிடவில்லை. அதேபோல் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புறுதி விவர ஆவணத்தை பரிசீலனை செய்யும் போது மேற்படி ஆவணம் முழுமையான தகவல்களுடன் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி ஆவணத்தில் முறையாக ஆணையுறுதி குறித்த விவரங்கள் கூட இல்லை. மேலும் மேற்படி ஆவணத்தில் சுயதொழில் செய்து மாதம் ரூ.40,000/- வருமானம் பெறுவதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதை நிரூபிக்கும் விதமாக வங்கிக்கணக்கு விவரங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

9. எனவே, மேற்படி மனுதாரரும், எதிர்மனுதாரரும் பணி நிலை மற்றும் அவர்கள் பெறும் வருமானம் ஆகியவை வழக்கு விசாரணை முடிவில் தான் தெரியும் என்பதால், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் பாதகம் ஏற்படாத வகையில் முதல்நோக்கு வழக்கினை கொண்டு நியாயமான ஜீவனாம்ச தொகையை இடைக்கால ஜீவனாம்ச தொகையாக வழங்க கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

10. மேற்கண்ட சூழ்நிலை மற்றும் காரணங்களின் அடிப்படையிலும் 1-ம் மனுதாரருக்கு உணவு , உடை , இருப்பிடம் மற்றும் இதர செலவுகளுக்காக மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/-மும் மற்றும் 2 மற்றும் 3-வது மனுதாரரான மைனர் குழந்தைகளின் மருத்துவம், மற்றும் இதர செலவுகளுக்காக மாதம் ஒன்றுக்கு தலா ரூ.2,000/- மும் ஆக மொத்தம் *ரூ.9,000/*-த்தை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 5-ம்

தேதிக்குள் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு செலுத்த உத்தரவிடுவது நியாயமானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**10. முடிவில்,**

மனுதாரருக்கு உணவு , உடை , இருப்பிடம் மற்றும் இதர செலவுகளுக்காக மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/–மும் மற்றும் 2 மற்றும் 3–வது மனுதாரரான மைனர் குழந்தைகளின் மருத்துவம், மற்றும் இதர செலவுகளுக்காக மாதம் ஒன்றுக்கு தலா ரூ.2,000/– மும் ஆக மொத்தம் *ரூ.9,000/*–த்தை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 5–ம் தேதிக்குள் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு நேரடியாகவோ, வங்கிக் கணக்கிற்கோ அல்லது டிஜிட்டல் பரிவர்த்தனை மூலமாகவோ இடைக்கால ஜீவனாம்சமாக செலுத்த வேண்டும் என்று உத்தரவிடுகிறது. மேற்படி பராமரிப்பு தொகையை இந்த மனுவான Crl.M.P.No.1047/2026 தாக்கல் செய்த தேதி முதல் DVOP 29/2025 வழக்கில் இறுதி உத்தரவு பிறப்பிக்கும் வரை மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஜுலை மாதம் 13– ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது .

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.07.13 11:34:13 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நிதிமன்றம்
தேனி.

<u>குறிப்பு:–</u>

இந்த உத்தரவின் நகலை மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இலவசமாக பெற்றுக்கொள்ளவும், இதன் நகலை நீதிமன்ற வரையறைக்குள் உள்ள காவல்நிலையத்திற்கும் அனுப்பி வைக்கவும் உத்தரவிடப்படுகிறது.